**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No.3/2016

Deposition of witness – PW24

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : நந்தகுமார் | | Caste | : |
| S/o. | : சண்முகம் | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed on 17.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 present. A2 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் தற்போது காமலாபுரம் மேல்தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 22.12.2014ம் தேதி என் அம்மா அலமேலு, என் அண்ணன் ரமேஷ், அண்ணி பூர்ணிமா 3 பேரும் கட்டட வேலைக்காக மல்லூர் செல்வதற்காக சேலம் புதிய பேருந்து நிலையத்தில் ஜோதி பேருந்தில் ஏறி சென்றபோது சந்தியூர் பிரிவு அருகே நாமக்கல்லிலிருந்து சேலம் நோக்கி வந்த டிப்பர் லாரி எதிரில் இருந்த தடுப்பு சுவரை இடித்துவிட்டு ஜோதி பேருந்தின் மீது மோதி பிறகு ஜோதி பேருந்தின் அருகே வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி

பிறகு அருகே இருந்த பள்ளத்தில் நின்றுவிட்டதாகவும் ஜோதி பேருந்தில் பயணம் செய்த என் அம்மா அலமேலுவிற்கு தலையிலும் இடது கையிலும் வலது காலிலும் காயம் ஏற்பட்டது. எனது அண்ணி பூர்ணிமாவிற்கு தலை நசுங்கியும் வயிறு கிழிந்தும் இறந்துவிட்டார்.

இந்த தகவலை என் அண்ணன் ரமேஷ் போன் செய்து சொன்னார். பின்னர் என் அப்பா, மற்றும் உறவினர்கள் அனைவரும் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தோம். அன்று இரவு 9 மணி அளவில் என் தாயார் இறந்துவிட்டார். மறுநாள் காவல் துணை கண்காணிப்பாளர் பிரேதத்தின் மீது விசாரணை நடத்தினார், என்னையும் விசாரித்தார். நான் நடந்ததை சொன்னேன்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.